# கிறிஸ்தவ நாகரிகம் புதிய பாடத்திட்டம்

## மனித வரலாற்றில் நாகரிகத்தின் தோற்றப்பாடும் கிறிஸ்தவ நாகரிகமும்

**அருட்தந்தை யா. றமேஸ் அ.ம.தி**

கடவுள் தன் சாயலாகவும் பாவனையாகவும் மனிதனைப் படைத்தார் (தொ.நூ 1:27). கடவுள் அவர்களை ஆசீர்வதித்து பலுகிப்பெருகி பூமியை நிரப்புமாறு அருளினார் (தொ.நூல் 1:28). ஆனால் மனிதன் கீழ்படியாமையால் கடவுள் அருளிய அருட்கொடையை இழந்து தவித்தான். மனிதன் தனக்குரியவற்றை தன் உழைப்பின் பயனாகவே பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கடவுள் மனிதனை பணித்தார். உணவே மனிதனின் முக்கிய அடிப்படைப் பிரச்சினையாக காணப்பட்டதால் அதற்கேற்றவாறு மனிதன் தன் வாழ்வியலை அமைத்துக் கொண்டான்.

மனித வரலாறுகளின் அடிப்படையில் 40000 ஆண்டுகளுக்கு முன்னரே மனிதன் ஒருவரோடு ஒருவர் கூடி வாழும் முறை தோன்றினாலும் 8000 ஆண்டுகளுக்கு பின்னரே நாகரிகம் குறித்து பேசப்படுகிறது. ஆற்றங்கரையோரமாக மக்கள் குடிசையமைத்த வாழ்ந்தமையால் கிராமச் சூழல் தோற்றம் பெற்றதாகக் கூறப்படுகிறது. நைல்நதி, யூப்பிரடீஸ் தைக்கிரீஸ் ஆற்றுவெளிகளில் கி.மு 5000 ஆண்டளவில் எகிப்து, மொசப்தேமியா, பபிலோனியா நாகரிகங்களும், சிந்து நதி பகுதிகளில் கி.மு 3000 ஆண்டுகளில் சிந்துவெளி நாகரிகமும் தோற்றம் பெற்றதாக கூறப்பட்டுள்ளது. ஆற்றுப் பள்ளத்தாக்குகளிலே விவசாயம், தச்சு தொழில் மற்றும் இரும்பு தொழில் போன்றன தோற்றம் பெற்று வளர்ச்சயடைந்துள்ளன. நகர மக்களின் வாழ்வியலை குறிக்கும் ‘நாகரிகம்’ எனும் பதம் நகரத்தில் வளர்ச்சி பெற்ற விவசாயம், பல்தொழில் துறைகள், வர்த்தக தொடர்புகள், நிர்வாக சீர் முறைகள், எண்கணித தோற்றம், வானியல் அறிவு போன்ற விடயங்களை உள்ளடக்கியதாகும். இவ்வாறு நாகரிகம் நகரத்தோடு இணைந்து வாழ்வின் எல்லாக்கூறுகளையும் உள்ளடக்கிய நிலையில் வளர்ச்சி பெற்றதெனலாம்.

### நாகரிகம்

வாழ்வின் எல்லா கூறுகளையும் அம்சங்களையும் விடயங்களையும் உள்ளடக்கி மனித சமூகத்தின் முழுமையான வளர்ச்சியை நோக்கிய ஒரு வாழ்வியல் அமைப்பே நாகரிகமாகும். நாகரிகம் நகரத்தோடு இணைந்ததொன்றாகும். நாகரிகம் காலத்துக்கு ஏற்ப மாறி வருகின்றன. அன்றைய அடிமைமுறைகளை அநாகரிகமாக் கருதி இன்று சுதந்திரம், ஜனநாயகம், சமத்துவம், சமபங்கேற்பு, சுயநிர்ணயம் என்பனவே நாகரிகத்தின் இயல்புகளாகக் கருதப்படுகின்றன. இன்றும் போர், இயற்கையழிப்பு, சுரண்டல்கள் அநாகரிகச் செயலாகக் கருதப்படுகின்றன. நாகரிகம் பின்வரும் கூறுகளை தன்னகத்தே கொண்டுள்ளது.

- நகர அமைப்பபை தேவைக்கும் கலையுணர்வுக்கும் பொருந்த அமைத்தல்
- பிறரோடு நன்முறையில் பழகுதல்
- உள்ளத்தோடு உடலையும் தூய்மையாக வைத்திருத்தல்
- சுகாதார பழக்கவழக்கங்களை கையாளுதல்
- போக்குவரத்து ஊர்திகள், பொதுவாழ்வுக்கான நிறுவனங்களை அமைத்து செயற்படுத்தல்
- பொருளாதார, அரசியில் கட்டமைப்பும், நீதி நிர்வாக சீர்மையும்

### பண்பாடு

ஒரு சமூகத்தின் நடை, உடை, பாவனை பழக்க வழக்கங்கள், ஒழுக்கம், மதிப்பீடு போன்ற வரையறை செய்யப்பட்ட அம்சங்களை மட்டும் கவனத்தில் கொள்வது பண்பாடாகும். ஒரு மக்கள் இனத்தின் தனித்துவமான வாழ்வியலை அவாகளுக்குரிய நிலத்தடன் இணைத்து உருக்கொடுத்து, மனிதனை தனி ஆளாகவும் குழுமமாகவும் சிந்தனை, சொல், செயல் வடிவங்களிற் கட்டுப்படுத்தக் கூடிய எல்லா மதிப்பீடுகள், கருத்தியல், நம்பிக்கைகள் என்பவற்றின் வெளிப்பாடே பண்பாடு

எனப்படும். மேலும் சமயநெறி, தத்துவ நோக்கு, அழகியலுணர்வு, குறிக்கோள்கள் என்பனவும் பண்பாட்டின் பரிணாமமாகத் தோன்றுகின்றன. மனிதன் தன் உடல், உள இயல்புகளை, திறமைகளைப் பண்படுத்தி, வளப்படுத்தி, வளர்ச்சியுறச் செய்ய எடுக்கும் அனைத்த முயற்சிகளும் பண்பாடு என்கிறது 2ம் வத்திக்கான சங்கம். மேலும் மனிதன் தன் அறிவு, உழைப்பு என்பற்றால் தன் அனுபங்களை பிறரின் முன்னேற்றத்திற்கு உதவும் வகையில் எடுக்கும் முயற்சியே பண்பாடு என்றும் சங்கம் விளக்கமளிக்கிறது. இன்று சமூகத்தின் பார்வையில் நாகரிகமும் பண்பாடும் பெரும்பாலும் ஒரே நோக்கிலே எண்ணப்படுகிறது.

## கிறிஸ்தவ நாகரிகத்தின் தோற்றம்

இயேசு நசரேத்தூரில் ஒரு யூதக் குடும்பததில் பிறந்து, யூதக் கலாச்சராத்தில் வளர்ந்து, யூத வரலாற்றைக் யூதப்பள்ளியிலேயே கற்றுத்தேர்ந்து, அச்சூழமைவில் சிந்திக்கவும், வாழவும் பயிற்றப்பட்டார். ஞானத்திலும் அறிவிலும் வளர்ந்து, தாய் மரியா கொண்டிருந்த இறை நம்பிக்கையிலிருந்து இறைவன் இரக்கமும், பரிவும், நேர்மையும், நீதியும் உள்ளவரென தன் வாழ்வில் வெளிப்படுத்தினார். யோசேப்பிடம் யூதச் சட்டங்களை கற்று, அச்சட்டங்களுக்குள் மூழ்கிவிடாமல் முழுமனித நலனைப் பேணிக்காத்திட உண்மைக்கும் நேர்மைக்கும் முதலிடம் கொடுத்தார். திருமுழுக்கின் மூலமாக அவர் பெற்ற இறையனுபவத்துடன் இறைவனோடு தந்தை மகன் உறவில் வளர்ந்து, இறைத்திட்டத்தை அறிந்து கொண்டார். இறையாட்சியை அனைவருக்கும் போதித்து, அதற்காகவே வாழ்ந்து, மரணித்து, மீண்டும் உயிர்பெற்றார். ஒரு புதிய நாகரிகம் தோன்றுவதற்கு இயேசுவின் வாழ்வும், போதனைகளும், படிப்பினைகளும், செயற்பாடுகளுமே அடிப்படையாக அமைந்துள்ளன. இயேசுவின் படிப்பினைகளை மையமாகக் கொண்டு தோற்றம் பெற்ற நாகரிகமே கிறிஸ்தவ நாகரிகமாகும்.

யூதநாகரிகம், கிரேக்க நாகரிகம் மற்றும் உரோமை நாகரிகம் என்பன கிறிஸ்தவ நாகரிகத்தில் நேரடியாக செல்வாக்குச் செலுத்தியுள்ளன. யூதநாகரிகம் நேரடியாக மொசப்பத்தேமிய மற்றும் எகிப்திய நாகரிகங்களின் தாக்கத்திற்கு உட்பட்டவையாகும். அத்துடன் சுமேரிய, கானானேய, அசீரிய, பபிலோனிய பண்பாடுகளின் சிறப்பு அம்சங்களுடன் வளாச்சி பெற்ற ஓர் நாகரியமாகும். சவுல், தாவீது, சாலமோன் போன்ற இஸ்ராயேல் முடிமன்னர்களின் ஆட்சிக்காலத்திலே பாலஸ்தீனப் பேரரசில் யூதநாகரிகம் உருவாக்கம் பெற்றுள்ளது.

யூதநாகரிகத்தின் நெறிமுறைகளுக்கு உட்பட்டவராயிருந்தாலும் இயேசு அதன் நெறிமுறைகளை புதிய கண்ணோட்டத்தில் விளக்கி வாழ்ந்தம் காட்டியுள்ளார். யூதநாகரிகத்தில் தாக்கத்தை ஏற்படுத்திய கிரேக்க, உரோமை நாகரிகத்தின் பண்புகளையும் வாழக்கையில் கைக்கொண்டு மக்களும் வாழக் கற்றுக்கொடுத்தார். இவையே கிறிஸ்தவ நாகரிகத்தின் அடிப்படையாகும். கிறிஸ்தவ நாகரிகமென்பது கிறிஸ்துவின் வாழ்கையிலும், போதனையிலும் மிளிர்ந்த நிதி, உண்மை, அன்பு, சமத்துவம், சகோதரத்துவம், தாழ்ச்சி, எளிமை, இரக்கம், மன்னிப்பு, விட்டுக்கொடுப்பு போன்ற பண்புகளை தமதாக்கி வாழ்வதாகும்.

## இன்றைய சமூகத்தினர் பார்வையில் நாகரிகமும் பண்பாடும்

இன்று சமூகத்தின் பார்வையில் நாகரிகமும் பண்பாடும் பெரும்பாலும் ஒரே நோக்கிலே எண்ணப்படுகிறது. இக்காலம் நாகரீகத்தில் அதிக வளர்ச்சி கண்டுள்ளது என பலராலும் பேசப்படுகிறது. எனினும் நாகரிகத்தின் வளர்ச்சி என்பது அறிவியலிலும் விஞ்ஞானத்திலும் மட்டும் தங்கியிருப்பதில்லை. ஒரு சமூகம் உலகுடனும் சகமனிதருடனும் தாம் வாழ்வதற்காக அமைத்துக்கொள்ளும் நம்பிக்கை, விழுமியங்கள், பழக்கவழக்கங்கள், ஒழுக்கம், கலை போன்றவற்றின் பகிர்வு முறையிலும். பல நகரங்கள், பல சமூக வகுப்பினர், அரசாங்கம் போன்றவற்றின் வளர்ச்சியிலுமே தங்கியுள்ளது. எமது முன்னோர்கள் தமது வாழ்வியல் மூலமாக தமது சமூகத்தின் கலை கலாசார மற்றும் பண்பாட்டின் வளர்ச்சியிலே நிறைவுகண்டார்கள். தமது வாழ்வின் மூலமாக தமது நிலத்துக்குரிய பண்பாட்டினை வெளிப்படுதினார்கள். ஆனால் இன்று நவீன நாகரிகத்தின் பெயரில் தமது வாழ்வியலையே கேள்விக்குட்படுத்தும் சமூகத்தையே காணமுடிகிறது. இவ்வாறான நிலையில் இன்று நாகரிகம் வளர்ச்சிப்பாதையில் செல்கிறதா…?